# மண்டுப்புளியின் சக்தி

நமது காமுகுல மக்கள் வட மாநிலங்களிலிருந்து அந்நியர்கள் படையெடுப்பின் காரணமாகத் தென்திசையை நோக்கி கூட்டம் கூட்டமாக வந்தார்கள். வரும் பொழுது தங்கள் கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலங்களையும், விவசாயம் செய்வதற்கு ஏற்ற நிலங்களையும், நீர்வளமுள்ள இடங்களையும் நாடி வந்துள்ளனர். தமிழகத்தை வந்து அடைந்தவுடன், நம்மவர்களில் சிலர் தர்மபுரி, கோவை, சேலம், ஈரோடு ஆகிய பகுதிகளில் குடியேறி வாழத் தொடங்கி உள்ளார்கள். மதுரை, திண்டுக்கல் மாவட்டப் பகுதிகளை நோக்கி வந்தவர்களில் திண்டுக்கல் பகுதியில் ஒருசில பிரிவினர் குடியேறி உள்ளனர். இன்னும் ஒரு சில பிரிவினர் தேனி மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளாகிய போடிநாயக்கனூருக்குத் தென்புறத்திலும் இன்னும் ஒரு சில பகுதியினர் தேனிக்கு தெற்கே கூடலூர் வரையிலும் குடியேறி வாழ்ந்துள்ளனர். தேனி மேற்கே வந்தவர்கள் டொம்புச்சேரியிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழலுற்றார்கள்.

டொம்புச்சேரியிலும் மற்றப் பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் ஆதியிலே மண்டுப்புளியை தெய்வமாக எண்ணி வழிபட்டுள்ளனர். நம்மவர்கள் ஆடு, மாடு மேய்த்தல், விவசாயம் செய்தல் போன்ற தொழிலைச் செய்து வந்தள்ளனர். சைவராகவே வாழ்ந்துள்ளனர். கிருஷ்ணனை வணங்கி வந்துள்ளனர். தங்களின் கால்நடைகளை பக்கத்திலே உள்ள சிறுமலை மல்லிங்கேசுவரன் மலைப் பகுதிகளுக்குக் கொண்டு போய் மேய்த்துள்ளனர். ஆடு, மாடுகளை மேய்ப்பதற்குப் போகின்றவர்கள் கம்பளியையும் மூங்கில் கம்புகளையும் கொண்டு சென்றுள்ளனர். இப்பகுதியிலே பரவலாக பொட்டிப்புரம், சூலப்புரம், குண்டல்நாயக்கன்பட்டி போன்ற கிராமங்களில் தொட்டியநாயக்கர் சந்ததியினரும் வாழ்ந்துள்ளனர். அவர்கள் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்காக சிறுமலை, மல்லிங்கேசுவரன் மலைப்பகுதிகளுக்கு சென்றுள்ளனர். அவர்கள் கம்பளியை உடன் கொண்டு போவது வழக்கமாகச் செய்துள்ளனர். இரு சமூகத்தினரிடையிலும், சிறு சிறு சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. நாயக்கர்கள் நாங்கள் ஏவல், பில்லி, சூனியம் போன்ற காரியங்களைச் செய்து உங்களை முடமாக்கியும், நோய் ஏற்படவும் செய்து விடுவோம் என்று எச்சரித்துள்ளார்கள். பில்லி, சூனியம் போன்ற காரியங்களைச் செய்துள்ளனர். அதையறிந்து நம்மவர்கள் மதியூகத்தைப் பயன்படுத்தி அவர்கள் வாழும் பகுதிகளில் வளர்ந்த அவரைக்கொடிப் பந்தலை அவர்களுக்கு தெரியாமல் அவரைக் கொடியை தரைக்கு கீழ் கத்தியால் வெட்டிவிட்டு வந்துவிட்டார்கள். அந்த அவரைக் கொடிகள் வாடிவிட்டது. இதை அறிந்து அவர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்து விட்டார்கள்.

மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து ஜமீன்தாரர்களும் நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். நம் பகுதியிலே வாழ்ந்த நாயக்கர்கள் ஒன்று கூடி இனி நாம் காப்பு இனமக்களோடு பகைமையை வளர்த்துக் கொள்ளக் கூடாது அவர்களோடு சமாதனமாகப் போகும் வழியை அறிந்து இரு சமூகத்தினுடைய பெரியோர்கள் ஒன்று சேர்ந்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்று முடிவு எடுத்தார்கள். காப்பு பெரிதா? கம்பளம் பெரிதா? என்ற பிரச்சினை தீர வேண்டுமானால்

டொம்புச்சேரியில் உள்ள மண்டுப்புளியில் இருபிரிவினரும் சத்திய பிரமானத்தை மீறலாகாது என்று கூறி, மண்டுப்புளிய மரத்தின் அடியில் இரண்டு பிரிவினரும் மேல்திசையில் ஒரு பிரிவினரும், கீழ்திசையில் ஒரு பிரிவினரும் அமர்வது என்று முடிவெடுக்கப்பட்டது. யார் உட்கார்ந்துள்ள பகுதியில் பகல் முழுவதும் நிழல் உள்ளதோ, அவர்கள் அந்த வாதத்தில் வெற்றி கண்டவர்கள் என்று முடிவு செய்துள்ளனர். அந்த முடிவை இரு சமூகத்தின் பெரியோர்களும் ஒப்புக்கொண்டு ஒரு நாளில் அந்த மண்டுப்புளியின் கிழக்குப் பக்கத்தில் அமர்ந்தால் மாலை வரை நம் பக்கமே நிழல் விழும் என்று எண்ணி கம்பளியைப் போட்டு கீழ்த்திசையில் அமர்ந்தார்கள்.

கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் படைத்த நீதிதவறாத நமது காமுகுல மக்கள் இறைவனை நினைத்து இன்பமுடன் காப்புயேது செய்தார்கள். ஆயணனை தஞ்சமென்று அடிபணிந்து சோதனைக்காகவே காப்பு மக்கள் கம்பளியை மேல்திசையில் போடலுற்றார்கள். இறைவனை வேண்டி அமர்ந்தார்கள். இன்றும் நம் காமகுல ஒக்கலிக மக்கள் வாழும் ஊர்களில் சிறுபான்மையனராக இருந்தாலும் கூட, நம் இனத்தவர்களே ஊர் நாட்டாமையாக இருக்கும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. அதற்கு காரணம், ஆங்கிலேயர் காலத்தில் நம் இனத்தவரின் நீதி நேர்மை கருத்தில் கொண்டு அங்கிலேயர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட இன்றும் வழக்கத்தில் உள்ளது.

இரு சமூகத்தவர்களும் மண்டுப்புளியில் அமர்ந்துவிட்டனர். காமுகுலத்தவர்கள் அமர்ந்த மேற்குத்திசையில் பகல் முழுவதும் நிழலாகவே இருந்தது. நாயக்கர்கள் அமர்ந்த கிழக்குத் திசையில் பகல் முழுவதும் வெயிலாகவே இருந்தது. இதை அறிந்த நாயக்கர்கள் காப்பு தான் உயர்ந்தது என ஒப்புக் கொண்டு போய்விட்டார்கள். இப்படிப்பட்ட மண்டுப்புளி இன்றும் உள்ளது. கலியுக தெய்வமாக கண்கண்ட தெய்வமாகவும், சத்தியத்தின் இருப்பிடமாகவும், நமது சமூகத்தவர்களுக்கு அருள்பாலிக்கும் தெய்வமாகவும் விளங்கும் மண்டுப்புளியிலே அமர்ந்துள்ள தாத்தப்பனை வழிபடுவோமாக.

நம்மவர்கள் அன்று முதல் இன்று வரை கம்பளியை தெய்வமாக வைத்து வழிபடுகிறார்கள். நல்ல காரியங்களும், தீய காரியங்களும் கம்பளி பயன்படுகிறது. மண்டுப்புளியின் சக்தி உயர்ந்தது. பில்லி, சூன்யம், திட்டு முறைப்பாடுகள், செய்வினை போன்ற தீயசக்திகளால் பாதிக்கப்பட்டவர்கள் தாத்தப்ப சாமி கோவிலுக்குப் போய் கம்பளியை போட்டு நம்மவர்கள் உட்கார்ந்து தீவிகைகளை நீக்க அருள்பாலிக்க வேண்டும் என்று வேண்டுதல் வைத்தால், அந்த தீய சக்திகள் நீங்கிவிடுகிறது. டொம்புச்சேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மக்கள் வருடம் தோறும் சித்திரை மாதம் 1, 2 தேதிகளில் தாத்தப்ப சுவாமிக்கு விழா எடுத்து வழிபடுகின்றார்கள். நம் குலமக்கள் சிறப்புடன் வாழ தாத்தப்பனை வழிபட வேண்டுகிறோம்.